06.03.2025

O.S.No.435 of 2018

PW1 திரு.சிவபிரகாசம் (1 முதல் 5 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை):-

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

இவ்வழக்கின் வாதி நாகம்மாள் மற்றும் அசல் வழக்கு எண்.20/2019 வழக்கின் வாதி ரேவதி ஆகியோரின் பொது அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. வாதிகளிடம் இருந்து நான் எந்த வருடம் பவர் பெற்றேன் என்று ஞாபகம் இல்லை. இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து சில்லரை கொண்ட நிலத்திற்கு நான் பவர் வாங்கியிருக்கின்றேன் தாவா சொத்து ராமாபுரம் கிராம நத்தத்தில் இருக்கின்றது. இவ்வழக்கின் பிரதிவாதிகள் வசந்தா, மோகன சுந்தரம் ஆகியோர் என் மீதும் குமார் என்பவர் மீதும் அசல் வழக்கு எண். 349/2015 என்ற வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பூந்தமல்லியில் தாக்கல் செய்திருந்தார்கள். அந்த வழக்கில் ஆஜராகி நான் என்னுடைய பதிலை தாக்கல் செய்திருக்கின்றேன். என்னிடம் காட்டப்படுவது நான் அவ்வழக்கில் தாக்கல் செய்த என்னுடைய எதிர்வழக்குரை என்று சொன்னால் சரிதான். அந்த எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் பி.த.சா.ஆ.1. இந்த எதிர்வழக்குரையை நான் 28.08.2015ல் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் எனக்கு அது சரியாக ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் வாதிகள் எந்த சர்வே எண்ணை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. நாகம்மாளின் மகள் தான் ரேவதி. இந்த சொத்துக்கள் கிராம நத்தம். இந்த சொத்துக்கள் நாகம்மாளின் கணவரின் தாயார் அஞ்சம்மாளுக்கு சொந்தமானது. இந்த சொத்துகள் அஞ்சம்மாளின் பூர்வீக சொத்துகள். அஞ்சம்மாளின் பூர்வீக சொத்துகள் என்றால் அவர்கள் பெரில் வருவாய் ஆவணங்கள் இருக்கின்றதா என்றால் இருக்கின்றது. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா போன்ற ஆவணங்களை தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் தாக்கல்

செய்யவில்லை. அந்த சமயத்தில் பட்டா, சிட்டா அரசாங்கம் கொடுக்கவில்லை. சாட்சி தற்பொழுது தனக்கு ஞாபகம் இல்லை என்று கூறுகின்றார். இது சம்மந்தமாக அரசாங்கம் எந்த உத்தரவாவது போட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அஞ்சம்மாள் பெயரில் பட்டா கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்த விவரம் எனக்குத் தெரியாது. வாதிகள் நாகம்மாள், ரேவதி பெயரில் பட்டா கேட்டு மனு ஏதாவது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(அறிவார்ந்த 1 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோ ளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)